ஊராட்சி படிவம் எண். 6

# பலவகை வரவு ரசீது

அசல்

புத்தக எண். : அத்திப் பாளையம் ஊராட்சி

பற்றுச் சீட்டு எண். : BG № 18567

நாள் : 15.7.2023

..... ஊராட்சி

திரு. M. கோவிந்தி கிராமம் கோனை என்பவரிடமிருந்து

ரூபாய் 2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)

மனை பிரிவு அலுவலர் வகைக்காக பெற்றுக் கொள்ளப்பட்டது.

பணம் செலுத்துபவரின் கையொப்பம். வரி வசூலிப்பவர். ஊராட்சி தலைவர்.

குறிப்பு 1. இந்த பற்றுச் சீட்டு ஊராட்சி தலைவரின் Facsimile-யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால் தான் செல்லுபடியாகும்.

2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்.

தலைவர்
அத்திப்பாளையம் ஊராட்சி

# அத்திப்பாளையம் ஊராட்சி
# தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை : திருமதி. சுபத்ரா புருஷோத்தமன் B.COM.

ப.மு./மு.மு.எண்: 03/2023-24 நாள்: 14.7.2023

பொருள் : சர்க்கார்சாமக்குளம் ஊராட்சி ஒன்றியம் அத்திப்பாளையம் ஊராட்சி குடியிருப்பு மனைப்பிரிவு திட்ட அனுமதி கேட்டல் தொடர்பாக-

பார்வை

1. மனுதாரர் M. கலைவாணி அவர்களின் விண்ணப்பம் நாள்: 18.04.2023 .
2. இவ்வலுவலக கடிதம் இதே எண். CBELPA/IHUHQSZ0-2023 நாள்: 05.06.2023-ல் சாலையமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கபட்டது.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர்/ சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.கஎண்.19799/2020 பொ/ நாள் 24.12.2020
4. மனுதாரர் M. கலைவாணி அவர்கள் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்து தானப்பத்திரம் எண்-11752/2023 , பெறப்பட்ட நாள் : 09.06.2023.
5. அரசாணை எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 04.06.2004.
6. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 04.05.2017.
7. அரசாணை எண். 18/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020 .
8. அரசாணை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறைUD4(3) நாள்: 23.09.2020.
9. அரசாணை எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD4(1) நாள்.09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3) /2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையார் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1/ நாள் : 08.09.2017.
12. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண்.320/2022 /TCP3 நாள்: 07.1.2022.
13. மனுதாரர் கட்டணம் செலுத்த அனுமதிக்கபட்ட நாள்: 05.06.2023 மற்றும்15.06.2023.
14. மனுதாரர் M. கலைவாணி கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள் : 14.06.2023 மற்றும்15.06.2023.
15. நகர் ஊரமைப்பு ஆணையார் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/TCP2 நாள்:14.10.2019.
16. CENTAGE FEE : RS.12,300.00/-
    DEVELOPMENT FEE: RS.9,033.60/-
    OSR FEE: RS.99,000.00

**அனுமதி உத்தரவு :**

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் கோயம்புத்தூர் மாவட்டம்- அன்னூர் வட்டம்- அக்ரகாரசாமக்குளம் கிராமம்/ அத்திப்பாளையம் ஊராட்சி/ க.ச.349/4 நெ. காலைக்கு கட்டுபட்ட பு.ஏ.1.86 ஏக்கர் (அ) 7527.40 ச.மீ மனைப்பிரிப்பில் அமைந்த குடியிருப்பு மனைப்பிரிவு திட்டம் வேண்டி **M. கலைவாணி** அவர்கள் சமர்ப்பித்துள்ள வரைபடங்கள் மாவட்ட ஊராட்சி கட்டிட விதிகள் 1971 (35/1972)-ன் படி மற்றும் ம.வ.(கோ.உ.தி.கு) எண்-326/2023,திட்ட அனுமதி எண்-372/2023 இணையவழி ஒப்புதல் நாள் - 23.06.2023-ன் படி அங்கீகாரம் செய்யப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள் :**

1. இந்த திட்டம் அனுமதியானது கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு உட்பிரிவு 1 மற்றும் 2 பிரிவு 91-A நகர் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)-ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2. பிரிவு 79 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)-ன் படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64 (1)ன் கீழ்மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/ அரசுக்கு மேல் முறையீடு செய்யலாம்.
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழு உறுப்பினர் செயலர் திட்ட அனுமதி அளித்த பிறகு
   (1) திட்ட அனுமதி பெற தவறான விபரம் மனுதார்ரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ/
   (2) சட்டப்படி சரியான வரி முறைகள் கடைபிடிக்கத்தவறியிருந்தாலோ/ உறுப்பினர் செயலர் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.
4. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.
5. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு வரி விதிக்கப்படின்/ அத்தகைய மீறல்களுக்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சியே (கோயம்புத்தூர் மாநகராட்சி உட்பட) பொறுப்பாகும்.
6. கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரி விதிக்கப்படுவதற்கு முனனர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டிற்கு மாறாகவும்/ மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57-ன் படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
7. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

**இணைப்பு :** அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்

தலைவர்
அத்திப்பாளையம் ஊராட்சி
சர்க்கார்சாமக்குளம் ஒன்றியம்

**பெறுநர் :**
திரு. M. கலைவாணி
5/66,ராபர்ட்சன் ரோடு,P.M.சாமி காலனி
R.S.புரம்,கோவை- 641003

**நகல்:** 1. உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர்,கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் , கோயம்புத்தூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.
2. சார்பதிவாளர், பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம், பெரியநாயக்கன்பாளையம் தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.
3. நிர்வாகபொறியாளர்,தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்,கோவை(வடக்கு) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.